# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515590


**ஆணை நாள்.03.07.2026**

**முன்னிலை**
**திரு அ. விஜயராம், எம்.ஏ., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்கள். SA 9807,9564/H/2024**

திரு.ப.செல்வராஜ் — மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
கோட்ட ஆய்வாளர், — பொது அதிகார அமைப்பு
நிலஅளவைப் பதிவேடுகள் துறை,
மாவட்ட நில அளவை அலுவலகம்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்- 620001.

பொதுத் தகவல் அலுவலர்/
வட்டத்துணை ஆய்வாளர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டம்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்- 620001.

**கோரப்பட்ட தகவல்:** மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் 03.03.2024 மற்றும் 06.04.2024 ஆகிய தேதிகளில், **08.03.2024 அன்று புலஎண்.4/2-வில் களப்பணியில் ஈடுபட்ட நில அளவை துறையினர் யார் யார் என்பது குறித்து பதவியின் பெயரோடு கூடிய தகவல்கள்** உள்ளிட்ட 18 இனங்களுக்கான தகவல்களை வேண்டி மனுக்களை தாக்கல் செய்துள்ளார். பொதுத் தகவல் அலுவலரால் முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டு, மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட (SA 9807,9564/H/2024) இவ்விரு இரண்டாம் மேல்முறையீட்டு மனுக்களும் ஒருசேர (03.07.2026) இன்று காணொலி காட்சி மூலம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

| | |
|---|---|
| **மேல்முறையீட்டாளர்** | திரு.ப.செல்வராஜ் அவர்கள் இன்றைய விசாரணைக்கு காணொலி காட்சி வாயிலாக ஆஜரானார். |
| **பொதுத் தகவல் அலுவலர்** | பொதுத் தகவல் அலுவலர்கள் திரு.மு.பழனி, கோட்ட ஆய்வாளர், நில அளவைப் பதிவேடுகள் துறை, திருச்சிராப்பள்ளி மற்றும் திருமதி.வெற்றிச்செல்வி, வட்ட துணை ஆய்வாளர், திருச்சிராப்பள்ளி மேற்கு, திருச்சிராப்பள்ளி ஆகியோர் இன்றைய விசாரணைக்கு நேரில் ஆஜரானார்கள். |

# ஆணை

இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொது தகவல் அலுவலர் 17.12.2025, 16.12.2025 மற்றும் 19.01.2026 ஆகிய தேதிகளிடப்பட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல் வழங்கப்பட்டதாக தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களை ஆணையத்தின் பார்வைக்குச் சமர்ப்பித்தார்.

2. இருதரப்பு வாதங்கள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது:-

- **மனுதாரரால் கேட்கப்பட்ட கேள்விகள் கேள்வி வடிவிலும், யூகத்தின் அடிப்படையிலும் இருப்பதாக பொது தகவல் அலுவலரால் தகவல் அளிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் முறையாக விசாரித்து தகவல் வழங்க பொது தகவல் அலுவலர் ஒப்புக்கொண்டதன்பேரில், அதனை மனுதாரரும் ஏற்பளிப்பு செய்ததன் அடிப்படையில், மீண்டும் தகவலினை மேல்முறையீட்டாளருக்கு வழங்க பொது தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.**
- **பொது தகவல் அலுவலரால் மனுதாரருக்கு காலதாமதமாக தகவல் வழங்கப்பட்டுள்ளதனை ஆணையம் பதிவு செய்கின்றது. தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005, பிரிவு 7-இன்படி விண்ணப்பத்தை பெற்ற 30 தினங்களுக்குள் மனுதாரர் கேட்டுள்ள தகவல்களை முழுமையாக வழங்க பொது தகவல் அலுவலர் தரக் கடமைப்பட்டவராவார். இந்நிலையில் சுமார் 1 ½ ஆண்டுகள் கழித்து மனுதாரருக்கு பொது அதிகார அமைப்பால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. ஆதலால் அப்போதைய பொது தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 20(1)-இன்கீழ் அதிகபட்ச தண்டமாக ரூ.25,000/- ஏன் விதிக்கக் கூடாது என்பதற்கு அவரது எழுத்து மூலமான விளக்கத்தினை அவரிடமிருந்து பெற்று, <u>11.08.2026</u> அன்று ஆணையத்தின் முன்பு நேரில் ஆஜராகி, சமர்ப்பிக்க இன்றைய தினம் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொது தகவல் அலுவலர், வட்ட துணை ஆய்வாளர், திருச்சிராப்பள்ளி மேற்கு அவர்களுக்கு இதன்மூலம் உத்திரவிடப்படுகிறது.**

**ஒம்/-(அ. விஜயராம்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண்கள். SA 9807,9564/H/2024</u>**

**<u>பெறுநர்</u>**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
கோட்ட ஆய்வாளர்,
நிலஅளவைப் பதிவேடுகள் துறை,
மாவட்ட நில அளவை அலுவலகம்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்- 620001.

பொதுத் தகவல் அலுவலர்/
வட்டத்துணை ஆய்வாளர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டம்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்- 620001.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திரு.ப.செல்வராஜ்,
எண்.2A/15, இந்திரா நகர்,
உறையூர் அஞ்சல்,
திருச்சிராப்பள்ளி-620003.
தொலைபேசி - 9245126623.

Copy to: file. GP/PC